**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்**

**முன்னிலை :-திருமதி.Dr.R.லதா .M.A., M.L., Ph.D.,**

**தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமை**

**திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீ விசுவாவசு வருடம்,**

**மாசி திங்கள் 28 ஆம் நாள்**

**வாழ்க்கைப் பொருளுதவி கோரும் மனு எண்.13//2025**

CNR.No.TNTV02-001330-2025

1) தேன்மொழி (எ) ஜெயப்பிரியா, வயது.31,
க/பெ.சசிக்குமார்,
த/பெ.சேட்டு,
நெ.40 கீழதெரு,
மருதப்பட்டினம்,
திருவாரூர் தாலுக்கா& மாவட்டம்.

2) ஷாலினி, வயது.6,
த /பெ.சசிக்குமார்,
நெ .40 கீழதெரு,
மருதப்பட்டினம்,
திருவாரூர் தாலுக்கா& மாவட்டம். ...**மனுதாரர்கள்**
(2 ம் இளவர்மனுதாரருக்காக அவரது தாயரும்,
கார்டியனுமான 1 ம் மனுதாரர் மூலமாக)

**-எதிர்-**

சசிக்குமார், வயது.32,
த/பெ.ரவி
நெ.82 ஆதிதிராவிடர் தெரு,
கருப்பூர்,
சேமங்கலம் அஞ்சல்,
திருவாரூர் தாலுக்கா& மாவட்டம். ..**எதிர்மனுதாரர்**

LATHA

Digitally signed by LATHA
DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 17:01:25 +0530

இவ்வழக்கு 07.03.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.T. மணி மற்றும் திருமதி. M. பிரதீபா மணி ஆகியோர் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.விஜயராகவன் மற்றும் திரு. S. மரிய ஜான் டேவிட் ஆகியோர் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் இன்று (12.03.2026) இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில் இம்மனு பிரிவு 144 ன் படி எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் தலா மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/- ஆக கூடுதல் ரூ.40,000/- வாழ்க்கை பொருளுதவியாக கொடுக்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுதாரர் மனுவின் சுருக்கம் -**

**1.1)** 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 27.05.2018 ம் தேதியன்று அடியக்கமங்கலம், பட்டக்கால் தெருவில் உள்ள பாத்திமா திருமண மண்டபத்தில் இருவீட்டார் முன்னிலையில் திருமணம் நடைபெற்றுள்ளது. திருமணத்தின்போது மனுதாரருக்கு 7 பவுன் தங்கநகையும், எதிர்மனுதாரருக்கு 3 பவுன் தங்க நகையும் ரூ.3,00,000/- மதிப்பிற்கு வீட்டு உபயோக பொருட்களும் ரூ.2,00,000/- ற்கு நிச்சயதார்த்த மற்றும் திருமண செலவுகள் செய்யப்பட்டது.

LATHA
Digitally signed by LATHA
DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 17:01:32 +0530

**1.2)** திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரர் மனுதாரரை பெண்பார்க்க வரும்போது எதிர்மனுதாரர் பிறவியிலேயே வாய் பேச முடியாமல் இருந்து வந்தது தெரிந்து மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர் சம்மதத்தின்பேரில் திருமணம் நடைபெற்று, அதன்பின்னர் எதிர்மனுதாரர் சொல்பேச்சுகள் புரியாமல் எதிர்மனுதாரரின் தாயாரின் மூலமாக எதிர்மனுதாரரின் தேவைகளை பூர்த்திசெய்தும், பின்னர் எதிர்மனுதாரரின் மொழியை புரிந்துகொண்டு எதிர்மனுதாரருடன் நல்லமுறையில் குடும்பம் நடத்தியும் வந்துள்ளார்.

**1.3)** இந்நிலையில், கடந்த 15.05.2019 அன்று ஷாலினி என்ற பெண்குழந்தை பிறந்தபோது எதிர்மனுதாரரும், அவரது தாயாரும் குழந்தையை பார்க்க செல்லாமலும், குழந்தையின் பெயர்சூட்டு விழாவிற்கும்செல்லாமலும் இருந்து வந்தபோது ஊர் முக்கியஸ்தர்களிடம் பேசி எதிர்மனுதாரர் வீட்டிற்கு மனுதாரர் அவரது குழந்தையுடன் சென்றுள்ளார். அதன்பின்னர், எதிர்மனுதாரரின் தாயார் பெண் குழந்தை என்பதால் மனுதாரர் மீது தவறான அவதூறுகளை எதிர்மனுதாரரிடம் கூறி டிஎன்ஏ பரிசோதனை எடுக்க கூறி மனுதாரரை அடித்து துன்புறுத்தி வந்தும், கடந்த 2022ம் ஆண்டு தாலியை பிடித்து அறுத்து வீட்டை விட்டு விரட்டியபோது 2023ஆம் ஆண்டு ஊர்முக்கியஸ்தர்களிடம் கூறி சேர்ந்து வாழுமாறு அறிவுறுத்தியபோது எதிர்மனுதாரரின் தாயார் குடும்பம் நடத்துவதற்கு பணம் இல்லை, தற்போது அழைத்து செல்லமுடியாது என மறுத்தும் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்றபோது 2023ம் வருடம் டிசம்பர் மாதம் 1ம் மனுதாரருக்கும்,

LATHA
Digitally signed by LATHA
DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 17:01:38 +0530

எதிர்மனுதாரரின் தாயாருக்கும் பிரச்சினை ஏற்பட்டது. அப்போது மனுதாரர் இந்த வீட்டில் குடும்பம் நடத்தினால் தற்கொலை செய்துகொள்வேன் என எதிர்மனுதாரரின் தாயார் மிரட்டியதால் எதிர்மனுதாரர் 15.12.2023 அன்று 1ம் மனுதாரரையும், அவரது குழந்தையையும் அவரது பெற்றோர் வீட்டிற்கு அனுப்பியுள்ளார்.

1.4) அதன்பின்னர் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுத்ததால் கடந்த 01.03.2025 அன்று திருவாரூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார்கொடுத்து, எதிர்மனுதாரரை அழைத்து விசாரித்தபோது எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ விருப்பமில்லையென மறுத்துவிட்டார்.

1.5) மேலும், எதிர்மனுதாரர் விவாகரத்து கோரி திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் HMOP.No.32/2025 மனுதாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. எதிர்மனுதாரர் அடியக்கமங்கலம், கருப்பூர் கிராமத்தில் R.J.S.A.என்ற தையல் கடை நடத்தி மாதம் ரூ.50,000/- சம்பாதித்து வருகிறார். ஆகவே, 1, 2 மனுதாரர்களின் பராமரிப்பு மற்றும் உணவு, உடை, மருத்துவ செலவு மற்றும் இருப்பிட வசதிக்காகவும் வாழ்க்கைப் பொருளுதவியாக எதிர்மனுதாரர் மாதந்தோறும் 1, 2 மனுதாரர்களுக்கு ரூ.40,000/-ம் ஜீவனாம்சமாக வழங்க உத்தரவிட வேண்டுமென்றும் மனுதாரர்கள் மனுவை அனுமதிக்க வேண்டுமென்றும் இந்த மனுவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

LATHA Digitally signed by LATHA
DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 17:01:44 +0530

2) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.</u>

2.1) மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது சட்டப்படியும் சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமண உறவு, குழந்தை பிறப்பு சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரரே நிரூபிக்கவேண்டும்.

2.2) எதிர்மனுதாரர் பிறவியிலிருந்து வாய்பேச முடியாத நபர் என்பதால் திருமணத்தின்போது மனுதாரர் தரப்பில் எவ்வித சீர்வரிசை பொருட்களும், நகைகளும் பெறவில்லை.

2.3) திருமணத்திற்கு பின்னர் எதிர்மனுதாரரும், 1ம் மனுதாரரும் எதிர்மனுதாரின் பெற்றோர் வீட்டில் 10 நாட்கள் மட்டுமே இந்த எதிர்மனுதாரருடன் இல்லறம் நடத்தி வந்ததாகவும், அதன்பின்னர் எதிர்மனுதாரரின் ஊனத்தை வைத்து 1ம் மனுதாரர் எதிர்மனுதாரரிடம் வீண்சண்டையிட்டு அவமானப்படுத்தி வந்ததோடு மட்டுமின்றி எதிர்மனுதாரருடன் வாழ முடியாது என்று கூறி திருமணம் முடிந்த ஒரு மாதத்திலேயே அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுள்ளார்.

2.4) அதன்பின்னர், 1ம் மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு எதிர்மனுதாரரும் அவரது பெற்றோரும் சென்று 1ம் மனுதாரரின் பெற்றோரிடத்தில் கூறியபோது 1ம் மனுதாரரின் பெற்றோர் 1ம் மனுதாரரை சமாதானப்படுத்தி எதிர்மனுதாரர் வீட்டிற்கு அனுப்பிவைத்தனர். அதன்பிறகு 1ம் மனுதாரர் 2 மாதங்கள் மட்டுமே எதிர்மனுதாரர் வீட்டில் வசித்தார். இந்நிலையில்,

LATHA Digitally signed by LATHA DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.03.12 17:01:51 +0530

1ம் மனுதாரர் கருவுற்ற விவரத்தை எதிர்மனுதாரரிடமும், அவரது பெற்றோரிடமும் சொல்லாமல் கடந்த 2018 வருடம் ஆகஸ்ட் மாதம் இறுதியில் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார்.

**2.5)** இந்நிலையில், 1ம் மனுதாரர் கருவுற்ற தகவலை 1ம் மனுதாரரின் பெற்றோர் எதிர்மனுதாரரின் பெற்றோருக்கு தெரிவித்து எதிர்மனுதாரரும், அவரது பெற்றோரும் 1ம் மனுதாரரை பார்க்க அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றபோது எதிர்மனுதாரரை பார்க்க விருப்பமில்லை என்றும், ஊமையை கல்யாணம் பண்ணி என் வாழ்க்கையே வீணாபோயிட்டு இனிமேல் உன்னுடன் வாழமுடியாது என்று திட்டி, அவமானப்படுத்தியுள்ளார்.

**2.6)** அதன்பின்னர், 2019 ம்வருடம் 1ம் மனுதாரருக்கு ஷாலினி என்ற பெண்குழந்தை பிறந்தபோது குழந்தையை பார்க்க சென்ற எதிர்மனுதாரரை பார்க்கவிடாமல் திட்டி அனுப்பிவிட்டு கடந்த 6 ஆண்டுகளாக அவரது பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறார்.

**2.7)** மேலும், எதிர்மனுதாரருக்கு அரசின் மூலமாக கொடுக்கப்பட்ட டைலரிங் மிஷினை வைத்து தனது வீட்டிலேயே துணிகளை தைத்து நாள் ஒன்றுக்கு ரூ.50/-, , 100/- என வருமானம் ஈட்டி தனது அன்றாடதேவைகளை செய்து வந்தநிலையில், தற்போது மேற்படி மிஷினும் பழுதடைந்து விட்டதால் தனது சகோதரரின் உதவியை கொண்டு வாழ்ந்து வருகிறார். மேலும், எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரை பலமுறை சேர்ந்து வாழ அழைத்தும் 1ம் மனுதாரர் வர மறுத்ததால் மனுவில் கோரியுள்ள சங்கதிகள் ஏற்கககூடியதல்ல என்பதால்

LATHA
Digitally signed by LATHA
DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 17:01:57 +0530

இந்த மனுவை எதிர்மனுதாரர் தரப்பு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி இந்த எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) **இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில்** -

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**4)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5)** மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்திலிருந்து 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 27.05.2018 ம் தேதி இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் நடைபெற்றுள்ளது என்பது ம.சா.ஆ.1 திருமண பத்திரிக்கையின் மூலம் தெரியவருகிறது. இருவருக்குமிடையே நடந்த திருமணத்தின்பயனாக 2ம் இளவர் மனுதாரரான ஷாலினி பிறந்துள்ளார் என்பது ம.சா.ஆ.2 ஆன 2ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் மற்றும் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டவகையிலும் நிரூபணமாகிறது.

**6)** இந்நிலையில், இருவருக்குமிடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்பதும் அது தொடர்பாக 01.03.2025 அன்று மருதப்பட்டிணம் காவல்நிலையத்தில் குற்றப்புகார் கொடுத்துள்ளார் என்பதும், அந்த புகாரின் பேரிலான விசாரணையில் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுத்துவிட்டார் என்பதும், எதிர்மனுதாரரும் விவாகரத்து கோரி திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் ஹெச்.எம்.ஓ.பி.எண்.32/2025 மனுதாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்பதும் ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5 ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது.

LATHA
Digitally signed by LATHA
DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 17:02:04 +0530

**7)** இவ்வழக்கை பொறுத்தவரை 1, 2 மனுதாரர்களின் மாதாந்திர ஜீவனாம்சத்திற்காக பராமரிப்பு தொகையாக ரூ.40,000/- கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளதை பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரர்களுக்கிடையே உறவு நிலை நிரூபிக்கப்பட்டுள்ளதால் 1ம் மனுதாரர் மனைவி என்ற முறையிலும், 2ம் மனுதாரர் மகள் என்ற முறையிலும் அவர்களை பராமரிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் எதிர்மனுதாரருக்கு உள்ளது.

**8)** எதிர்மனுதாரர் பிறவியிலேயே வாய் பேசமுடியாதவர் என்றபோதும் அவர் தையல் தொழிலின் மூலம் பணம் ஈட்டி வருகிறார் என்பது விசாரணையிலிருந்து தெரியவருகிறது. சுயமாக தையல் கடை எதுவும் நடத்தவில்லை என குறிப்பிட்டபோதும், எ.ம.சா1 தனது குறுக்குவிசாரணையில்

> **"தையல் தொழில் செய்வதற்காக வேண்டி நான் எனது மகனுடன் உதவியாக இருப்பேன் என்றால் சரிதான் என்றும், எனது பேத்தி, எனது மருமகளுக்கும் எதிர்மனுதாரரான எனது மகன் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான்"**

என சாட்சியமளித்துள்ளார். அதேபோல், எ.ம.சா.2 தனது குறுக்கு விசாரணையில்

> **" என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.7 புகைப்படத்தில் உள்ள கடை எதிர்மனுதாரருடையது. சாட்சி தற்போது அது சொந்தமாக இல்லை, அது வாடகை கடை "**

என அளிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து எதிர்மனுதாரர் தையல் கடை நடத்தி

LATHA
Digitally signed by LATHA
DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 17:02:11 +0530

பொருளீட்டி வருவது நிரூபணமாவதால் மனுதாரர்களை பராமரிக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் எதிர்மனுதாரருக்கு உள்ளது என்பதால் மனுவில் கோரியுள்ளவாறு மாத ஜீவனாம்ச தொகையாக தலா ரூ.5,000/-ம் வழங்கும்பட்சத்தில் மனுதாரர்கள் தங்களை பராமரித்து கொள்ள குறைந்தபட்ச போதுமான தொகையாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

9) முடிவில், எதிர்மனுதாரர் மனுதாக்கல் செய்த நாள்முதல் மாதந்தோறும் 1ம் மனுதாரருக்கு ரூ.5000/-மும், 2ம் இளவர் மனுதாரருக்கு ரூ.5000/-மும் ஆக கூடுதல் ரூ.10,000/-ஐ 1, 2 மனுதாரர்களின் உணவு, உடை, பராமரிப்பு மற்றும் மருத்துவ செலவிற்காக ஒவ்வொரு மாதமும் 05 ஆம் தேதிக்குள் நேரிடையாகவோ அல்லது 1ம் மனுதாரரின் வங்கிக் கணக்கிற்கோ வைப்பீடு செய்ய வேண்டுமென்றும் மறு உத்தரவு வரும்வரை கொடுக்க வேண்டுமென்றும் இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னால் என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் நாளில் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

LATHA
Digitally signed by LATHA
DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 17:02:20 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

**I. மனுதாரர் தரப்புச் சாட்சிகள் -**

ம.சா.1 -- திருமதி.தேன்மொழி (எ) ஜெயப்பிரியா

ம.சா.2 - திருமதி.ஜெயந்தி

**II. மனுதாரர் தரப்புச் சான்றாவணங்கள் -**

ம.த.சா.ஆ.1 -- 27.05.2018 தேதியிட்ட திருமண பத்திரிக்கை அசல்

ம.த.சா.ஆ.2 -- 15.05.2019 தேதியிட்ட 2 ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல்

ம.த.சா.ஆ.3 -- 2 ம் மனுதாரரின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல்

ம.த.சா.ஆ.4 -- 01.03.2025 தேதியிட்ட மருதப்பட்டிணம் காவல்நிலையத்தில் 1ம் மனுதாரர் கொடுத்த புகார் மனு எண்.CSR.No.123/2025

ம.த.சா.ஆ.5 -- எதிர்மனுதாரரால் திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி தாக்கல் செய்யப்பட்ட HMOP.No.32/2025

ம.த.சா.ஆ.6 -- 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல்

ம.த.சா.ஆ.7 -- R.J.S.,A, என்ற பெயரில் உள்ள டைலர் கடையின் புகைப்படம்

ம.த.சா.ஆ.8 -- ஜெயந்தியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல்

**III. எதிர்மனுதாரர் தரப்புச் சாட்சிகள்**

எ.ம.சா.1 – திருமதி.ஜானகி

எ.ம.சா.2- திரு.தியாகராஜன்

**IV. எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் -**

| | |
|---|---|
| **எ.ம.சா.ஆ.1–** | எதிர்மனுதாரருக்கு அரசு மூலமாக வழங்கப்பட்ட மாற்று திறனாளி சான்று அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |

LATHA

Digitally signed by LATHA
DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 17:02:37 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.